**கருக்கம்**

சாதிச் சான்றிதழ்கள்- மாநிலத்தின் குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ள இனத்தைச் சேர்ந்தவர்கள் அப்பகுதிகளிலிருந்து குடிபெயர்ந்து வேறு பகுதிகளில் வசித்து வரும் நிலையில் குடியேறியுள்ள பகுதிகளிலேயே அவர்களுக்குரிய சாதிச் சான்றிதழ்கள் வழங்குவதற்கு வழிவகை செய்து ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்(பிநசிபி)துறை**

அரசு ஆணை (நிலை) எண்.95 நாள்: 28.10.2009

படிக்கவும்:

1. அரசு கடித எண். 6616/பிநசிபி/2009-1, பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 11.08.2009.

2. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர் - செயலர் கடித எண். 230/தநாபிஆ/2009 நாள் 08.09.2009.

------

தென்மாவட்டங்களில் இருக்கின்ற மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு மாவட்ட எல்லை வரையறையின்றி தமிழகத்தில் எங்கு வாழ்ந்தாலும் சாதிச்சான்றிதழ்கள் வழங்கிட வேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது.

2. முக்குலத்தோர் என்று அழைக்கப்படும் கள்ளர், மறவர், அகமுடையர் வகுப்புகளில் கள்ளர் வகுப்பும் அதன் உட்பிரிவான ஈசநாட்டு கள்ளர் வகுப்பும் தமிழ்நாடு முழுவதிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. கள்ளர் வகுப்பின் மற்ற உட்பிரிவுகளான கந்தர்வ கோட்டை கள்ளர், கூட்டப்பால் கள்ளர், பிரமலைக்கள்ளர் மற்றும் பெரிய சூரியூர் கள்ளர் ஆகிய வகுப்புகள் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சீர்மரபினர் வகுப்புகளாகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், இதே போன்று மறவர் வகுப்பும், அதன் உட்பிரிவுகளான அப்பநாடு கொண்டையம் கோட்டை மறவர் மற்றும் செம்பநாடு மறவர் வகுப்புகள் குறிப்பிட்ட சில மாவட்டங்களில் சீர்மரபினர் வகுப்புகளாகவும், இதர மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன. மற்றொரு உட்பிரிவான கருமறவர் வகுப்பு தமிழ்நாடு முழுவதிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் அகமுடையர் வகுப்பு தமிழ்நாடு முழுவதும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது.

3. மேற்குறிப்பிட்ட வகுப்புகள் தவிர வேறு சில வகுப்புகளும் குறிப்பிட்ட மாவட்டங்களில் மட்டும் சீர்மரபினர் வகுப்புகளாகவும், பிற மாவட்டங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாவும் அறிவிக்கப்பட்டுள்ளன. மொழிவாரி மாநிலங்கள் ஏற்படுத்தப்பட்டபோது மேற்கொள்ளப்பட்ட முடிவிற்கிணங்க சில வகுப்புகள் கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டம் ஆகிய பகுதிகளில் மட்டும் பிற்படுத்தப்பட்ட வகுப்புகளாகவும்; மாநிலத்தின் இதர பகுதிகளில் முன்னேறிய வகுப்புகளாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. தாசபளஞ்சிகா வகுப்பு கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மட்டும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், புலவர் வகுப்பு கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் மட்டும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும், வைநாடு செட்டி வகுப்பு நீலகிரி மாவட்டத்தில் மட்டும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும் கொங்கு செட்டியார் வகுப்பு கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களிலும் அரையர் மற்றும் லத்தீன் கத்தோலிக்க கிறித்துவ வண்ணார் வகுப்புகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் மிகப்பிற்படுத்தப்பட்ட வகுப்பாகவும் அறிவிக்கப்பட்டுள்ளன.

4. மேற்குறிப்பிட்டவாறு குறிப்பிட்ட பகுதிகளில் மட்டும் பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் வகுப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ள வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் தற்போது நடைமுறையில் உள்ள அரசாணைகளின்படி அவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ள பகுதிகளில் மட்டுமே அவர்களுக்குரிய சாதிச் சான்றிதழ்களைப் பெற முடியும். அப்பகுதிகளிலிருந்து நீங்கி வேறு பகுதிகளில் குடியேறி வசித்து வரும் நிலையில் அவ்வகுப்பு குடியேறிய பகுதியில் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளதோ அதற்குரிய சான்றிதழையே பெற முடியும். தங்களது பூர்வீகத்தின் அடிப்படையில் சாதிச் சான்றிதழ்கள் பெற விரும்பினால் அவர்களது சொந்த ஊருக்கு சென்றுதான் சான்றிதழ் பெற வேண்டும்.

5. கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் இதர காரணங்களினால் சொந்த மாவட்டங்களை விட்டு நீங்கி வேறு மாவட்டங்களில் குடியேறி வசித்து வருபவர்கள் தங்களுக்குரிய சான்றிதழ்களை அவர்களது சொந்த ஊர்களிலேயே பெற வேண்டும் என்ற நடைமுறையினால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாகின்றனர் என்றும், சொந்த மாவட்டங்களில் சொத்துக்களோ அல்லது குடிமைப் பொருள் வழங்கு அட்டையோ இல்லாத நிலையில் அங்கு சான்றிதழ் பெற இயலுவதில்லை என்றும் தெரிவித்து தாங்கள் தற்போது வசிக்கும் பகுதியிலேயே தங்களது சொந்த மாவட்டத்தின் அடிப்படையில் உரிய சான்றிதழ்கள் வழங்கும் வகையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

6. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசு கடிதத்தில் மேற்குறிப்பிட்ட கோரிக்கையின் மீது தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பரிந்துரையினை பெற்று அனுப்புமாறு தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர் - செயலர் கேட்டுக் கொள்ளப்பட்டார்.

7. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினர்-செயலர் அரசுக்கு அனுப்பி வைத்துள்ள ஆணையத்தின் பரிந்துரையில் குறிப்பிட்ட பகுதிகளில் வசிக்கும் மக்கள் வேறு பகுதிகளுக்கு செல்வதால்

அவர்களது வகுப்பின் தகுதி மாறிவிடும் என்று குறிப்பிடுவது நீதிக்கு எதிரானதாகும் என்பதும், குறிப்பிட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு பிற்படுத்தப்பட்ட அல்லது சீர்மரபினர் என்று சான்றிதழ் வழங்குவதற்குரிய அளவு கோல்கள் அவர்கள் வேறு பகுதிகளில் குடியேறுவதால் மாற்றம் பெறாது என்பதும், எனவே, அவர்கள் குடிபெயர்ந்து வந்தது மற்றும் குறிப்பிட்ட பகுதிகளில் அல்லது எங்கிருந்து குடிபெயர்ந்தனரோ அந்த பகுதியில் அவர்களது வகுப்பின் நிலை ஆகியவற்றிற்கான ஆதாரம் அளிக்கப்பட்டால் அத்தகைய சான்றிதழ்களை குடியேறிய பகுதிகளில் உள்ள தகுதிவாய்ந்த அலுவலர்களே வழங்கலாம் என்பதும் ஆணையத்தின் கருத்து என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் தெரிவித்துள்ள கருத்துக்களை ஏற்றுக் கொண்டு, குறிப்பிட்ட பகுதிகளில் (மாவட்டங்கள் மற்றும் வட்டத்தில்) மட்டுமே பிற்படுத்தப்பட்ட அல்லது மிகப்பிற்படுத்தப்பட்ட அல்லது சீர்மரபினர் என்று அறிவிக்கப்பட்டுள்ள வகுப்புகளை சேர்ந்தவர்கள் அப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து மாநிலத்தின் வேறு பகுதிகளில் குடியேறியுள்ள நிலையில், அவர்கள் தாங்கள் குறிப்பிட்ட வகுப்பினை சேர்ந்தவர்கள் என்பதற்கும் மற்றும் அவ்வகுப்பு பிற்படுத்தப்பட்ட அல்லது மிகப்பிற்படுத்தப்பட்ட அல்லது சீர்மரபினர் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வந்து குடியேறியவர் என்பதற்கும் ஆதாரமாக அப்பகுதிகளில் (மாவட்டங்கள் மற்றும் வட்டத்தில்) தங்களது பெற்றோருக்கு வழங்கப்பட்ட சாதிச்சான்றிதழ் போன்றவற்றை வழங்கும்பட்சத்தில், அதன் அடிப்படையில் அவர்களுடைய வகுப்பு அவர்களது சொந்த மாவட்டத்தில் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளதோ அதற்குரிய சான்றிதழ்களை குடியேறிய பகுதிகளில் உள்ள சாதிச் சான்றிதழ் வழங்கும் அலுவலர்கள் வழங்கலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

9. மேலே பத்தி 8 இல் வெளியிடப்பட்டுள்ள ஆணையினை பின்பற்றி உரிய நபர்களுக்கு சான்றிதழ்கள் வழங்க சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் படைத்த அலுவலர்களுக்கு தக்க அறிவுரைகள் வழங்குமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(ஆளுநரின் ஆணைப்படி)

து.நா.இராமநாதன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
முதன்மை செயலர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர்,
சென்னை –5.
பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர், சென்னை –5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர், சென்னை –5.
சிறுபான்மையினர் நல ஆணையர், சென்னை -5.
உறுப்பினர் - செயலர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் ஆணையம், சென்னை - 4.
அனைத்து துறை தலைவர்கள்
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து பொதுத்துறை நிறுவனங்கள்

செயலாளர்,
தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை-2.
(இணைப்பு கடிதத்துடன்)
பதிவாளர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை – 104.
(இணைப்பு கடிதத்துடன்)
பதிவாளர், உயர்நீதிமன்றம், மதுரை (இணைப்பு கடிதத்துடன்)
பதிவாளர், அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், கொடைக்கானல் 624101.
பதிவாளர், தமிழ்நாடு திறந்த நிலை பல்கலைக்கழகம், சென்னை - 5.
பதிவாளர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010.
பதிவாளர் பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சிராப்பள்ளி 620 024.
பதிவாளர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் 641 046.
பதிவாளர், பெரியார் பல்கலைக்கழகம், சேலம் 636 011.
பதிவாளர், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி 627 012.
பதிவாளர், வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
641 003.
பதிவாளர், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
பதிவாளர், அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி.
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை 600 025,
பதிவாளர், அண்ணா பல்கலைக்கழகம், கிண்டி, சென்னை 600 025.
பதிவாளர், எம்.ஜி.ஆர் மருத்துவ பல்கலைக்கழகம், சென்னை.
பதிவாளர், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை – 51
பதிவாளர், சட்டப் பல்கலைக்கழகம், சென்னை.
இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்பு, செய்தி மற்றும் சுற்றுலாத் துறை,
சென்னை – 9.

<u>நகல்</u>

தலைமைச் செயலகத்தின் அனைத்து துறைகள், சென்னை – 9.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலர், சென்னை – 9.
மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர்,
சென்னை – 9
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

[signature] 28/10/09

பிரிவு அலுவலர்.